# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2096/48 - 2018 නොවැම්බර් මස 07 වැනි බදාදා - 2018.11.07

*2096/48 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 2/3/1/4/4.

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/2/2015/HA/299.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

இங்கு பகிரங்கத் தேவை என்பது அம்பன்கங்க கோரளை பிரதேச செயலகம் அமைந்துள்ள காணி எடுத்தலாகும்.

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், அம்பன்கங்க கோரளை பிரதேச செயலாளர் பிரிவிலே அம்பன்கங்க கோரளை சிறுபிரிவில், பல்லேதென்ன கிராம அலுவலர் பிரிவிலே பல்லேதென்ன கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2018.08.23 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட, பூ. வ. மா. 1729 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு A, எனக் காட்டப்பட்டுள்ள மொத்த விஸ்தீரணம் 0.3744 ஹெக்டயார் கொண்ட ஓபல்கல தோட்டம் எனும் காணியின் விபரம் பின்வருமாறு :

**துண்டு A - காணியின் பெயர் : ஓபல்கல தோட்டம்; உரிமை கோருபவர் : காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம் : 0.3744 ஹெக்டயார்**

வடக்கு: அம்பன்கங்க கோரளை கல்விக் காரியாலயம் அமைந்துள்ள பல்லேதென்ன தோட்டம், பிரதேச சபைக்குரிய வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி; கிழக்கு: வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி மற்றும் வீதி; தெற்கு: வீதி மற்றும் எஸ். சிவகுமார் மற்றும் ஏனையோர் உரிமைகோரும் பல்லேதென்ன தோட்டம்; மேற்கு: வீதி மற்றும் எஸ். சிவகுமார் மற்றும் ஏனையோர் உரிமைகோரும் பல்லேதென்ன தோட்டம், அம்பன்கங்க கோரளை கல்விக் காரியாலயம் அமைந்துள்ள பல்லேதென்ன தோட்டம்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு அம்பன்கங்க கோரளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வசன்தா வர்ணகுலசூரிய,
பிரதேச செயலாளர்,
அம்பன்கங்க கோரளை,
மாத்தளை மாவட்டம்.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
அம்பன்கங்க கோரளை,
*2018, நவெம்பர் 01.*

*11 - 905*

திருத்தம்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: HAK/LAN/1/7.

1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் மேற்குறித்த தலைப்பின் கீழ் இலக்கம் 2091/46 மற்றும் 2018, ஒற்றோபர் 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரத்தின் III ஆம் பகுதியில் என்னால் விளம்பரப்படுத்தப்பட்ட குறிப்பு இல. HAK/LAN/1/7 மற்றும் 2018, செத்தெம்பர் 28 ஆந் திகதிய விளம்பரத்தின் நேர்முகப் பரீட்சை திகதி மற்றும் நேரம் நட்டஈடு தொடர்பாக விண்ணப்பம் முன்வைக்கும் திகதி பின்வரும் விதமாக திருத்தப்பட்டதாக இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

9 ஆம் பிரிவின் கீழ் நேர்முகப் பரீட்சை திகதி
- 2018.12.17, மு. ப. 10.00 மணி

நட்ட ஈடு தொடர்பாக விண்ணப்பம் முன்வைக்கும் திகதி
- 2018.12.10, மு. ப. 10.00 மணி

குஸலக நாணாயக்கார,
பிரதேச செயலாளர்,
ஹக்மன.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
ஹக்மன,
2018, ஒற்றோபர் 29.

11 - 906